விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 080 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 25 வியாழக்கிழமை (09.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



## கடும் பாதுகாப்புச் சட்டங்களை இலங்கை கைவிட வேண்டும்

### ஐ.நா அறிவுறுத்தல்



(கொழும்பு)
இலங்கையில் உள்ள கடுமையான பாதுகாப்புச் சட்டங்களை உடனடியாக முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

பலவீனமான கடன் மற்றும் பொருளாதார நெருக்கடி, இலங்கையில் அடிப்படை பொருளாதார மற்றும் சமூக உரிமைகளுக்கான மக்களின் அணுகலை கடுமை 11

## 15 ரூபாயால் குறைந்தது கோதுமை மா விலை

(கொழும்பு)
ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 15 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக பிரதான கோதுமை மா நிறுவனமான பிறிமா நிறுவனம், நாட்டிலுள்ள அனைத்து பிறிமா கோதுமை மா விற்பனையாளர்களுக்கும் அறிவித்துள்ளது.

டொலரின் விலை குறைவினால் பிறிமா நிறுவனம் விற்பனை செய்யும் ஒவ்வொரு கிலோ கோதுமை மாவின் விலையும் 15 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக விற்பனை பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (4-7)

## பாணின் விலை

### 10 ரூபாயால் குறைப்பு

(கொழும்பு)
நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் பாண் ஒன்றின் விலை 10 ரூபாயால் குறைக்கப்படவுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் யாழ். மாவட்டத்தில் நேற்று நள்ளிரவு முதல் பாணின் 11

### இம்மாத இறுதியில் நாணய நிதிய கடன்

# பந்து எமது கையில்

# ஆடத்துக்கு தயாராகுங்கள்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



*(கொழும்பு)*
இம்மாத இறுதியில் நாணய நிதியக் கடன். பந்து எமது கைகளுக்கு கிடைத்துள்ளது. அடித்து ஆடத் தயாராகுங்கள் என ஆளுங்கட்சி உறுப்பினர்களிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

*(11ஆம் பக்கம் பார்க்க)*

## மோ.சைக்கிள் மோதி முதியவர் உயிரிழப்பு

(கரணவாய்)
ஆலயத்துக்கு சென்ற வயோதிபர் ஒருவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் வயோதிபர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த கந்தையா வீரசிங்கம் (வயது- 86) என்பவரே உயிரிழந்தவராவார். 11

### வவுனியாவில் மீட்கப்பட்ட சடலங்கள்

## நஞ்சருந்தியதற்கான ஆதாரங்கள் உடலில் ஏதும் இருக்கவில்லை

- மேலதிக பரிசோதனைக்கு மாதிரிகள் அனுப்பி வைப்பு
- சட்டவைத்திய பரிசோதனை அறிக்கையில் தகவல்

(வவுனியா)
வவுனியாவில் மர்மமான முறையில் மரணமடைந்தவர்களின் சடலங்களுக்கான சட்டவைத்திய பரிசோதனை நேற்று 11

### கால்நடைகளில் இலம்பித் தொற்று

## கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு எச்சரிக்கை

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்டத்தில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், கால்நடைகளை விற்பனை செய்தல், அப்பகுதி மாடுகளை வேறு மாகாணங்களுக்கு கொண்டு செல்லுதல், மாட்டிறைச்சி உண்பது, பசுப்பால் அருந்துதல் போன்றவை தடை செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முதல் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது. 11

## செவ்வாய் நள்ளிரவே QR புதுப்பிக்கப்படும்

(கொழும்பு)
உடன் அமுலுக்கு வரும் வகையில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் நள்ளிரவில் QR கோட்டா புதுப்பிக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதுவரை, QR ஒதுக்கீடு ஒவ்வொரு வாரமும் ஞாயிறு நள்ளிரவில் புதுப்பிக்கப்பட்டது.

இதனால் ஏற்படும் விநியோகச் செலவைக் குறைக்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 11

## பூநகரியில் கோர விபத்து; நால்வர் படுகாயம்



(தருமபுரம்)
பரந்தன் பூநகரி வீதியின் நல்லூர் பகுதியில் ஹயஸ் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பூநகரி பிரதேச சபையின் வீதி நுழைவாயில் தூணில் மோதி நேற்று விபத் 11

## விபத்துக்குள்ளான பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்ட சுகாதார உதவியாளரான இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று புதன்கிழமை உயிரிழந்தார். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எம்.பி. ஆகிறார் ஜனக ரத்நாயக்க

இலங்கை பொதுப்பயன் பாடுகள் ஆணைக் குழு வின் தலைவர் ஜனகரத் நாயக்க அரசியல் கட்சி ஒன்றின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பின ராக பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வின்போது மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜே சேகர இதனைத் தெரி வித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதில ளித்த போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டுள்ளார்.

எனவே, பொதுபயன் பாடுகள் ஆணைக்குழு வின் தலைவர், அரசிய லில் ஈடுபட்டிருப்பதால் அவரைப் பெரிதாக எடுத் துக்கொள்ளக் கூடாது என் றும் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (4-7)

## தப்பி ஓட முயன்ற கைதி சுட்டுக்கொலை

(கொழும்பு)

கேகாலை சிறைச் சாலையில் இருந்து தப்பிச் செல்ல முயன்ற கைதி ஒருவர் சிறைச்சாலை அதி காரிகளால் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளார். குறித்த கைதி சிறைச்சாலையின் பணிகளுக்காக அதிகாலை யில் ஈடுபடுத்தப்பட்டிருந்த வேளையில் அங்கிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட போதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த கைதி குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட பின்னர் உயி ரிழந்துள்ளார். (4-7)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் அதிபர்
திரு. ந.கந்தவனச்செல்வன்
அவர்களின் அன்புத் தாயார்
அமரர்
**நடராசா புவனேஸ்வரி**
அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும் : "நலன்புரிக்கழகம்"
யா/செங்குந்த இந்துக்கல்லூரி.
(14836)

# மரண அறிவித்தல்



தோற்றம் 20 – 08 – 1935
மறைவு 06 – 03 – 2023

## திரு. ஐயாத்துரை கணேசன்

(ஓய்வு பெற்ற MLT- யாழ் போதனா வைத்தியசாலை)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் "வசந்தம்" வளவத்தை கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட ஐயாத்துரை கணேசன் அவர்கள் கடந்த (06.03.2023) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருமேனி ஐயாத்துரை - பகவதி தம்பதிகளின் அன்பு மகனும், ஜெயராணியின் அன்புக்கணவரும், வாகீசன், வாதுலன் (HNB) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரமணி, Dr.சுஜனிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், நிலவன், அக்னிஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், குலேந்திரன், ராஜேந்திரன், அருந்ததி, சந்திரபூபதி (ராணி), ராஜேஸ்வரி (பவா), ஜெகதீசன், ஜெகதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அமரர் செல்வராணி மற்றும் புஷ்பராணி, ஸ்ரீகாந்தன், ஸ்ரீபாலா, ஸ்ரீநேசா, ஸ்ரீரவீந்திரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (07.03.2023) செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : வாகீசன் கணேசன் (077 2[illegible])
வாதுலன் கணேசன் (077 731 20[illegible])
(14830)

# மரண அறிவித்தல்



தோற்றம் 01 – 11 – 1954
மறைவு 08 – 03 – 2023

## மனோகரன் சந்திரமலர்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோகரன் சந்திரமலர் 08.03.2023 புதன்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் மனோகரனின் (பெயின்ரர்) அன்பு மனைவியும், சிந்துஜா (லண்டன்), நரிஸ்ஹரன் (லண்டன்), கிஷாந்தினி (கனடா), மேனகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சசிதரன் (லண்டன்), மகிஷா (லண்டன்), மதனபாஸ்கர் (கனடா), றஜீதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சரூன், ஷர்னிஸ், கேய்சா, அபிஷா, சைமி, அனிஷ், அஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.03.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று திருவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 54/4, தனங்காவில்,
பிள்ளையார் வீதி, திருநெல்வேலி. (14838)
தகவல் : குடும்பத்தினர்.
தொ.பே. 077 418 6641, 077 476 7173

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



தோற்றம் 27 . 04 . 1956
மறைவு 08 . 02 . 2023

அமரர்
## தர்மகுலம் தர்மதயாளன் (பாபு)

கடந்த 08.02.2023 புதன்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் தர்மகுலம் தர்மதயாளனின் அந்தியேட்டிக் கிரியை நாளை 10.03.2023 வெள்ளிக்கிழமை அன்று காலை 6.00 மணியளவில் கீரிமலை புண்ணிய தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் இடம்பெறும். மறுநாள் 11.03.2023 சனிக்கிழமை துன்னாலை வடிவேலர் மணி மண்டபத்தில் இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

**குறிப்பு : இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

[illegible] வீதி,
புலோலி தெற்கு, புலோலி. (C-6124)
இங்ஙனம் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறலுக்கான புதிய பொறிமுறை ஸ்தாபிக்கப்பட வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

(கொழும்பு)

**காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் போன்ற உள்ளக நீதிப் பொறிமுறைகள் தற்போது அவசியமற்றவையாக மாறியிருப்பதுடன் அவை பாதிக்கப்பட்ட தரப்பினரின் நம்பிக்கையை இழந்திருக்கின்றன. எனவே பொறுப்புக்கூறல் சார்ந்த பொறிமுறைகளை அரசாங்கம் முழுமையாக அமுல்படுத்துவதுடன் உண்மையைக் கண்டறிவதற்கான புதிய பொறிமுறையானது நாடளாவிய ரீதியிலான விரிவான கலந்துரையாடல்களின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.**

ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் இயங்கும் உபகட்டமைப்பான சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் தொடர்பில் மீளாய்வு செய்யும் மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவின் 137 ஆவது கூட்டத்தொடர் கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமானது.

அதன்படி இலங்கை தொடர்பான மீளாய்வு நேற்று நடைபெற்றதுடன் இன்றும் நடைபெறவுள்ளது. மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இம்மீளாய்வுக்குழுவின் கூட்டத்தொடரை முன்னிறுத்தி மனித உரிமைகள் அமைப்புக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கை தொடர்பான தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளன.

அந்தவகையில் ஐ.நா மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவிடம் இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே சர்வதேச மன்னிப்புச்சபை மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது.

மன்னிப்புச்சபையின் அறிக்கையில் அமைதிப் போராட்டங்கள் மீதான அடக்குமுறைகள், பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் பயன்பாடு மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படாமை ஆகிய மூன்று விடயங்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (4)

# பெப்ரவரியில் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு

(கொழும்பு)

2023 பெப்ரவரி மாத இறுதியில் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு 2,217 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது ஜனவரி 2023 இல் உத்தியோகபூர்வ கையிருப்பு மதிப்பு 2,121 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 4.5% அதிகரிப்பைக் குறிக்கிறது.

இருப்பினும், தற்போதைய உத்தியோகபூர்வ கையிருப்புகளில் சீனாவின் மக்கள் வங்கியின் நாணய பரிமாற்ற சலுகையும் அடங்கும் என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (4)

# தபால் மூல வாக்களிப்பு இம்மாதம் 28- 31 வரை

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நடைபெறும் திக்திகள் குறித்த அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதன்படி இம்மாதம் 28 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை தபால் மூல வாக்களிப்பை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதி நடத்த தீர்மானித்து தேர்தல்கள் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

அதன்படி, இது தொடர்பான அறிவிப்பை வெளியிட மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது. (4)

# மகிந்தவின் பயணத்தடை நீக்கம்



(கொழும்பு)

நாட்டின் பொருளாதார சீர்குலைவுக்கு காரணமானவர் என்ற குற்றச்சாட்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தடையை நீக்குமாறு மகிந்த ராஜபக்ஷ தமது சட்டத்தரணி ஊடாக நீதிமன்றைக் கோரினார்.

ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையில் தென் கொரியாவில் நடைபெறவுள்ள மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்கு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கி வெளிநாட்டு பயணத் தடையை நீக்கியது. (4)

# உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்பட வேண்டும்

## மொட்டுக் கட்சி

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே தங்களது கட்சியின் நிலைப்பாடு என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பாரிய கூட்டங்களை நடத்தாதபோதிலும், கிராம மட்டத்தில் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(4)

# ஒரு பில்.இந்திய கடன் கால எல்லையை நீடிக்க இரு நாடுகளும் பேச்சு

(கொழும்பு)

இந்தியா வழங்கிய 1 பில்லியன் டொலர் கடனை திருப்பி செலுத்தும் காலத்தை இந்த ஆண்டு இறுதி வரை நீடிக்க இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

மருந்துகள் மற்றும் உணவுப் பொருட்களை இறக்குமதிக்காக வழங்கப்பட்ட இந்த கடன் உதவி எதிர்வரும் 17 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் பொருளாதாரம் முன்னேற்றம், அந்நியச் செலாவணி கையிருப்பு அதிகரிப்பிற்கு மத்தியில் இந்த நீடிப்பு பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.

குறித்த நிதியுதவியில் சுமார் 300 மில்லியன் டொலர்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதால், கடனை திருப்பிச் செலுத்தும் காலத்தை 6-12 மாதங்களுக்கு நீடிக்க அரசாங்கம் விரும்புவதாக கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் இந்தியாவிடம் இருந்து எந்தவித உடன்பாடும் இதுவரை எட்டப்படவில்லை என நிதி அமைச்சின் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (4)

# மின்சார கட்டணத்தை ஜூலை மாதம் குறைக்க முடியும்

## அமைச்சர் காஞ்சன



(கொழும்பு)

புதிய மின்சார உற்பத்தித் திட்டத்திற்கு, எதிர்க்கட்சிகள் உட்பட அனைவரும் ஆதரவளித்தால் எதிர்வரும் ஜூலை மாதம் மின் கட்டணத்தை குறைக்க முடியும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனைத் தெரிவித்தார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கடும் ஆட்சேபனைக்கு அமைவாக அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளதாக காஞ்சன விஜேசேகர கூறினார்.மின்சார சபையின் இழப்பை ஈடுகட்ட கட்டணம் உயர்த்தப்படவில்லை என்றும் மின்சார உற்பத்தி திட்டத்தை சரியான முறையில் செயற்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

மின்சார சபை ஊழலை குறைக்க ஆலோசனைகளை வழங்கி உள்ளதாகவும் ஆனால் அதற்கு எதிராக சிலர் செயற்படுகின்றனர் என்றும் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கட்டணம் வசூலிப்பதால், தொடர்ந்தும் மின்சாரம் வழங்க முடிந்தது என்றும் மின் உற்பத்தி திட்டத்தை . செயற்படுத்தினால், டிசெம்பருக்குள் மின் கட்டணத்தை குறைக்க முடியும் என காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். (4)

# நாட்டில் பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேட சலுகை

## இலங்கை மத்திய வங்கி

(கொழும்பு)

இலங்கையில் பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்காக விசேட சலுகை வழிமுறைகள் தொடர்பில் மத்திய வங்கி அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி தற்போதைய பேரண்டப் பொருளாதார நிலைமைகளால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கும் தனிப்பட்டவர்களுக்குமான சலுகை வழிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட கடன் பெறுநர்களுக்காக நீடிக்கப்பட்ட மீள் கொடுப்பனவுக் காலங்கள், சலுகை வட்டி வீதங்கள், தொழில்படு மூலதனக் கடன்கள், படுகடனை காலந்தாழ்த்திச் செலுத்தும் வசதி மற்றும் கொடுகடன் வசதிகளை மறுசீரமைத்தல், மீள அட்டவணைப்படுத்தல் போன்றவற்றை இந்த திட்டங்கள் உள்ளடக்கியுள்ளன.

இந்த சலுகைகள், சுற்றுலாத் துறை, ஆடை, பெருந்தோட்டம், தகவல் தொழில்நுட்பம், ஏற்பாட்டுச் சேவை வழங்குநர்கள், போக்குவரத்து, பாடசாலை வான் சேவை வழங்குநர்கள், பார ஊர்திகள், சிறிய பொருள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் பேருந்துகள் அத்துடன் தனியார் துறை ஊழியர்கள் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட துறைகளின் பல சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு உதவியளிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பணியாளர் தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் பணியாற்றுவதற்கு கீழ்க் குறிப்பிடப்படும் பணிகளுக்கு பணியாளர்கள் தேவையாக உள்ளது.

**பணி நிலை வெற்றிடங்கள்**

1. பராமரிப்பாளர்கள் பெண் (Warden) -12
2. கணக்காளர்
3. காசாளர் (ஆண் / பெண்) - 01
4. உளவளத் துணையாளர் (ஆண் / பெண்) - 01
5. விடுதிகள், கோயில் பராமரிப்பாளர் (ஆண் / பெண்) - 01
6. கறவை பசுப்பண்ணை பராமரிப்பாளர் - 01 (அனுபவம் உள்ளவர்கள்) ஆண்
7. உட்கட்டமைப்பு அபிவிருத்தி அலுவலர் - 01 (ஆண்)
8. சாரதிகள் (ஆண் ) - 02

**தகைமை**

❖ **பராமரிப்பாளர்களுக்கான தகைமைகள்**

1. வயதெல்லை 25 - 50 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. நல்ல உடல் உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. Child Care NVQ தொழிற் தகைமைச் சான்றிதழ் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
4. தங்கியிருந்து கடமையாற்றுதல் வேண்டும்.

❖ **கணக்காளர்**

1. இலங்கை கணக்காளர் சேவையில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்கள்.

*அல்லது*

2. சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தகுதி வாய்ந்த தனியார் நிறுவனங்கள் போன்றவைகளில் கணக்காளராக கடமையாற்றியவர்கள்.

*அல்லது*

3. கணக்கியல் துறையில் பட்டம் பெற்றவர்கள்.

❖ **காசாளருக்கான தகைமைகள்**

1. வயதெல்லை 20 - 50 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. நல்ல உடல் உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. தங்கியிருந்து கடமையாற்றுவற்கு விரும்புவோர் முன்னுரிமைப்படுத்தப்படுவார்கள்.
4. க.பொ.த உயர்தர வர்த்தகப்பிரிவில் சித்தி அல்லது அதற்கு மேலான கல்வித் தகைமை.

❖ **உளவளத் துணையாளர் (ஆண் / பெண்)**

1. க.பொ.த உயர்தர சித்தியுடன் உளவியல் துறையில் டிப்ளோமா அல்லது பட்டத்தினைப் பெற்றிருத்தல்.
2. வயதெல்லை 25 - 50 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
3. தங்கியிருந்து கடமையாற்றுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. தொழில் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

❖ **சாரதிகள் (ஆண்கள்)**

1. இல்ல நடைமுறைகளுக்கு அமைவாக இல்லத்தில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை 25 - 50 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
3. க.பொ.த சாதாரண தரத்திற்கு குறையாத கல்வித்தகைமை.
4. சகல வாகனங்களும் செலுத்தக்கூடிய வலுவில் உள்ள சாரதி அனுமதிப் பத்திரத்தினை வைத்திருத்தல் வேண்டும்.
5. நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

❖ **ஏனைய பணிகளுக்கான தகைமைகள்**

1. வயதெல்லை 25 - 60 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. தொழில் அனுபவம் கொண்டவர்கள் விரும்பத்தக்கது.
3. நல்ல உடல் உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
4. தங்கியிருந்து கடமையாற்றுவதற்கு விரும்புவோர் முன்னுரிமைப் படுத்தப்படுவார்கள்.

குறித்த பணிகளுக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள். எதிர்வரும் 20.03.2023 இற்கு முன்னர் தங்களது சுயவிபரத்தினை கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபால்மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியும்.

**குறிப்பு :-**

- சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
- தங்குமிடம், உணவு இலவசமாக வழங்கப்படும்.

தொடர்பு முகவரி
**ச.மோகனபவன்.**
தலைவர்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி. 021492 3118 / 077 324 0950 (C56123)


# ‘வடக்கின் பெரும் போர்’ இன்று ஆரம்பம்

(கொழும்பு)

“வடக்கின் பெரும் போர்” என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் இடையிலான நூற்றாண்டு கால கிரிக்கெட் போட்டி இன்று 9ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி 3 நாட்கள் நடைபெறவுள்ளது.

116ஆவது முறையாக இடம்பெறும் இப்போட்டி, இம்முறையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது.

ஆரம்ப நாள் நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெற்று போட்டி முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த் ஆண்டுடன் யாழ்ப்பர்ணம் பரியோவான் கல்லூரியின் 200ஆவது ஆண்டு பூர்த்தியாவதால் போட்டி தொடர்பான எதிர்பார்ப்பு இரு கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் கிரிக்கெட் ரசிகர்களிடம் காணப்படுகிறது. (4-6,33)

# பிரான்சிஸ்க் ஜோசப் வெற்றிக்கிண்ணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி சம்பியன்




யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 20 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட பிரான்சிஸ்க் ஜோசப் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மதியம் 1.30 மணியளவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது .

யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு ஏ.நிகரிலனும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு எஸ்.கீர்த்தனும் தலைமை தாங்கினர்.

நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்படி அவ்வணி 19.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 86 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

87 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு ‘துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 10.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று கிண்ணத்தை கைப்பற்றி சம்பியனானது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்த எம்.சௌத்தியன் தெரிவானார்.

யாழ்ப்பாணக் கல்லூரிக்கு எதிரான பொன் அணிகள் போர், ராஜன் கதிர்காமர் வெற்றிக்கிண்ண ஒரு நாள் போட்டி மற்றும் பிரான்சிஸ்க் ஜோசப் வெற்றிக் கிண்ணம் ஆகிய மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி வரலாற்று சாதனை படைத்துள்ளது. (4-6)



இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது. இதற்கான கிண்ண அறிமுக நிகழ்வில் ரிம் சௌதி (நியூஸி ), திமுத் கருணாரத்ன (இலங்கை) ஆகியோர் காணப்படுகின்றனர்.

# கால்பந்தாட்ட அரங்கில் ரசிகர்களிடையே வன்முறை

துருக்கியில் உள்ள பர்சா நகரில் அமைந்துள்ள கால்பந்தாட்ட அரங்கில் ரசிகர்களிடையே வன்முறை சம்பவம் காரணமாக அப்பகுதியில் பெரும்பரபரப்பு நிலவியது.

கடந்த ஞாயிறன்று அந் நாட்டின் இரண்டு உள்ளூர் அணிகளுக்கிடையில் நடை பெற்ற கால்பந்தாட்டப் போட்டியில், குர்திஷ் இன மக்கள் அதிகம் வாழும் பகுதியைச் சேர்ந்த் அணி பங்கேற்றிருந்தது.

கால்பந்தாட்ட அரங்கி லிருந்தவர்களில் ஒரு சாரார் அந்த அணிக்கு எதிர்ப்பு தெரிவித்தும், குர்திஷ் இன மக்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் பல்வேறு கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

மைதானத்திற்குள் பட்டாசுகளை கொளுத்திப் போட்டமை, தண்ணீர் போத்தல்களை வீசியமையினால் இரண்டு அணி ரசிகர்களிடையே பலத்த மோதல் ஏற்பட்டு இன வன்முறையாக மாறியது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் பெண்களை குறிவைத்து சைபர் துன்புறுத்தல்கள் அதிகரிப்பு

## பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு

(கொழும்பு)

பெண்களுக்கு எதிரான சைபர் துன்புறுத்தல்கள் அதிகரிப்பது குறித்து பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு கவலை வெளியிட்டுள்ளது.

பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. டிஜிட்டல் தளங்களில் பாலின வன்முறைகளை கையாள்வதற்கு பயனுள்ள மற்றும் திறமையான முறைப்பாட்டு பொறிமுறைகள் அவசியம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

டிஜிட்டலை மையமாகக் கொண்ட பாலின வன்முறை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியம் எனவும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு தெரிவித்துள்ளது.

டிஜிட்டல் தளங்களை எவ்வாறு பாதுகாப்பாக பயன்படுத்துவது என பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் உலகமயமாக்கல் காரணமாக பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மாற்றமடைந்துள்ளன.

சர்வதேச பெருந்தொற்று மற்றும் நடமாட்டத்தின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக உலகில் வாழ்க்கை பாரிய விதத்தில் மாற்றமடைந்தது. தொழில்கள் கல்வி மற்றும் சமூக செயற்பாடுகள் மாற்றமடைந்தன எனவும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (4)

# பல்கலை மாணவர்கள் மீது கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை பிரயோகம்

## மன்னிப்பு கோரிய பொலிஸார்

(கொழும்பு)

ஆர்ப்பாட்ட பேரணியை கலைக்கும் போது பல்கலைக்கழக வளாகத்திற்குள் கண்ணீர்ப்புகை தாக்குதலை நடத்தியமைக்காக கொழும்பு பல்கலைக்கழக நிர்வாகத்திடம் இலங்கை பொலிஸ் மன்னிப்பு கோரியுள்ளது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் நேற்று முன்தினம் நடத்திய எதிர்ப்பு பேரணிக்கு கொழும்பில் முக்கிய இடங்களுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டது.

இதனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு அருகில் கூடியதால்அவர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இதனால் பாதிக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்காத பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் நிர்வாக ஊழியர்களிடம் பொலிஸார் மன்னிப்பு கோரியுள்ளனர். (4)

# தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி ரணில் அழைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக அனைத்து தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. தற்போது, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வரி திருத்தம் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

அத்துடன், அரச வைத்திய அதிகாரிகள் சங்கமும் நேற்று முன்தினம் ஜனாதிபதியுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தது. தொழில் ரீதியாக தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவது குறித்து இதன் போது பேசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (4)


### பெயர் மாற்ற அறிவித்தல்

இல:- 182,1ம் குறுக்குதெரு யாழ்ப்பாணத்தை வதிவிடமாக கொண்ட வடிவேல் அசான் ஜெயக்கொடி ஆகிய நான் இன்றிலிருந்து "வடிவேல் ஹரிஷாந்த்" எனும் பெயரையே சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என்பதனை அறியத்தருகின்றேன்.

வடிவேல் ஹரிஷாந்த்

(14835)



## சாவகச்சேரி பிரதேச சபை பகிரங்க ஏல அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேசசபையின் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், வாகன ரயர்கள்,வாகன பற்றறிகள் , வெற்று தார் பரல்கள், தகரங்கள், இரும்புகள், அலுமினிய கதவுகள் மற்றும் ஏனைய பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட உள்ளன.

காலம் -21.03.2023 (செவ்வாய்க்கிழமை)
நேரம் -மு.ப 10.00 மணி
இடம் - சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகம்

ஆர்வமுடைய கேள்விதாரர்கள் மீளளிக்கக்கூடிய வைப்பு ரூபா 1000.00 தொகையினை செலுத்தி பற்றுச் சீட்டினை பெற்று அலுவலக நேரத்தில் பொருட்களை பார்வையிடலாம் என்பதுடன் ஏலத்தில் சித்திபெறும் கேள்விதாரர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும். மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**திரு.கந்தையா வாமதேவன்,**
**தவிசாளர்.**
**சாவகச்சேரி பிரதேச சபை.**

09.03.2023

(சி-6122)



## 31 ஆவது ஆண்டு நினைவலைகள்

அமரர்.
**இராசையா செல்வராசா**
(இளைப்பாறிய ஆசிரியர்)

மலர்வு 18.06.1920 உதிர்வு 19.02.1992

அன்பான அப்பா
காலங்கள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள்
பசுமையானது.
உங்கள் ஆத்மா சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்



(14826)

சுபசதனம், செம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

உங்கள் குடும்பத்தினர்: மகள்மார்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்


# இராசிபலன்

09.03.2023
மாசி 25, வியாழக்கிழமை
துதியை முன்னிரவு 9.01 மணிவரை

அத்தம் பின்னிரவு - 5.54 மணிவரை
சுபநேரம் -7.54-9.24 மணிவரை
இராகுகாலம்-1.54-3.24 மணிவரை

சந்திராஷ்டமம் - பூரட்டாதி

வளவன்

**மேஷம்** தொழிலில் இருந்த மறைமுக எதிர்ப்புகள் மாறும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், கௌரவமான நாள்.

**கடகம்** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்** ஒரு சில வேலைகளுக்காக சற்று அலையும் சூழ்நிலை ஏற்படலாம், புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மகரம்** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு,அரசு வழியில் அனுகூலமுண்டு.

**சிம்மம்** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பேச்சில் இனிமை தென்படும்.

**விருச்சிகம்** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், விருந்தினர் வருகையுண்டு, வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது,திருடர் பயமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்

**மிதுனம்** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேர லாம், பொதுக் காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், குடும்பத்தினரிடையே ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும்.

**தனுசு** செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்,பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்** குடும்பத்தினரிடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும், சொந்த பந்தங்களின் வருகையுண்டு, வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள்.


எதிலும் திருப்தி காண்பவர்கள் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடளாவிய ரீதியில்
# சுகாதார ஊழியர்கள் வேலை நிறுத்த போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**அரசின் வரிக் கொள்கைக்கு எதிராக சுகாதார ஊழியர்களின் நாடுதழுவிய வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று வடக்கு மாகாணத்திலும் முன்னெடுக்கப்பட்டது.**





மின் கட்டணத்தை குறை, வங்கி வட்டி வீதத்தை குறை, மருந்துத்தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய், மேலதிக நேரவிடு முறை நாள் சம்பளத்தை வெட்டுவதனைத் தவிர் உள்ளிட்ட கோரிக்கையை முன்வைத்து குறித்த ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மருத்துவர்கள் மற்றும் தாதியர் தொழிற்சங்கங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து சுகாதாரத் தொழிற்சங்கங்களாலும் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் நேற்று புதன்கிழமை காலை 6.30 தொடக்கம் இன்று காலை 6.30 வரையான காலப் பகுதிவரை ஒரு நாள் அடையாள வேலைநிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால் நோயாளர்கள் பெரிதும் சிரமப்பட்டனர். (4-6-30-299-316)



திருவள்ளுவர் நாள் மற்றும் உலக மகளிர்நாள் என்பன கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நேற்றுக் காலை கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்றது. (படம்-சிவசாந்தன்)

## பழுதடைந்திருந்த எழு தாரகை பாதுகாப்பான இடத்திற்கு மாற்றம்



(யாழ்ப்பாணம்)

அண்மையில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னாயத்த கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய எழு தாரகை பயணிகள் கப்பல் பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

அதற்கமையவே குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது. எழுதாரகை கப்பல், எழுவைதீவு இறங்கு துறை பகுதியில் இருந்து நேற்று கடற் படையினரால் பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டுள்ளது.

ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் இடம் பெற்ற குறித்த முன்னாயத்த கூட்டத்தில், எழுவை தீவு மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக, பழுதடைந்த நிலையில் உள்ள எழு தாரகை கப்பல் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் அது தொடர்பில் மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அதிகாரிகளினால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலையில், கப்பலை திருத்தி சேவையில் ஈடுபடுத்தும் வரையில், பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாத வகையில் பாதுகாப்பான இடத்தில் கப்பலை நிறுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு, வடக்கு மாகாணத்திற்கான கடற்படை தளபதியிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் முன்வைத்தார். (4-6)

## மெய்வல்லுநர் போட்டி

(அராலி)

யாழ்.அராலிவள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 1 மணியளவில் பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (4-6-104)

(யாழ்ப்பாணம்)

யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் மைதான திறப்பு விழாவும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வும் 2023 இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் கோ. பத்மநாதன் தலைமையில் இடம் பெறும். (4-6)

(கரணவாய்)

யா/நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி 2023, நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உல்லிய முன்றலில் பாடசாலை அதிபர் சிவ..... தலைமையில் இடம் பெறும். (4-6-60)

## கனடாவிலிருந்து பணம் அனுப்பி இளவாலையில் வாள்வெட்டு
### விசாரணையில் தகவல்

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிப்புலம் ஐயப்பன் கோவில் பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி ஒருவர் மீது வாளால் வெட்டி காயப்படுத்தி அவரது காரையும் சேதப்படுத்தி தப்பிச் சென்ற நால்வர் அடங்கிய குழு கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான குழுவினரால் நேற்று முன்தினம் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணையில் கனடா நாட்டிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் பணம் அனுப்பப்பட்டு இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரியவந்துள்ளது.

பனிப்புலம் மற்றும் சங்கானை பகுதியைச் சேர்ந்தவர்களே இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து வாள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (4-6-33)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நூலாசிரியர் கொ.பாபு எழுதிய கவிதைத் தொகுப்பின் புதிய திருப்பம் எனும் நூலின் அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ்.டேவிற் வீதி, இல.128 கலைத்தூது அழகியல் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. (4-6)

## இலவச கண்புரை சத்திர சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ்.போதனா மருத்துவமனையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவசமாக கண்சத்திரசிகிச்சையினை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான நோயாளர்களைத்தெரிவு செய்யும் கண் பரிசோதனைமுகாம்கள் பின்தங்கிய பிரதேசங்களில் ஒழுங்குபடுத்தப்படவுள்ளன. இதன் பிரகாரம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு இரண்டாவது கண் பரிசோதனைமுகாம் வேலணை பிரதேச மருத்துவமனை, மற்றும் மருதன்கேணி பிரதேச மருத்துவமனை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

எனவே கண்புரைசத்திர சிகிச்சைமேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படிகண் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (4-6)

## மருத்துவர் ,தாதியர்களுக்கான மேலதிக பயிற்சி நிலையம் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் தாதியர்களுக்கான மேலதிக பயிற்சி நிலையம் கடந்த திங்கட்கிழமை அன்று திறந்து வைக்கப்பட்டது.

ஐக்கிய இராச்சிய யாழ். மருத்துவ பீட பழைய மாணவ சங்கத்தின் பல மில்லியன் ரூபா பங்களிப்பில் மேற்படி நிலையம் அமைக்கப்பட்டது. மேற்படி சங்கத்தின் தலைவர் மருத்துவர் நவநீதன், யாழ். மருத்துவ பீட பீடாதிபதி, மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தாதியர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் பங்கு பற்றினர்.

வடக்கில் இருக்கும் அனைத்து மருத்துவர்கள் மற்றும் தாதியர்களுக்கான பயிற்சிகளை இங்கு வழங்க முடியும். (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார நெருக்கடி

## தவறான முடிவெடுக்கும் மக்கள்

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, பலரை தூக்கிட்டு தற்கொலைக்கு கொண்டு சென்றுள்ளதாக ஆய்வு ஒன்றில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.**

அத்துடன், அதிக வாழ்க்கைச் செலவை எதிர்கொள்வது முதல் குழந்தைகளுக்குக் குறைவாக உணவளிப்பது வரை, இந்த நெருக்கடியானது குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மீது அதிக பாதிப்பை ஏற்படுத்தியதால், நாடு முழுவதிலும் உள்ள அனைத்து குடும்பங்களையும் பாதித்துள்ளதாக அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

இன்றைய இளைஞர்களும் தங்களின் செலவுகளைச் சமாளிக்க பொருத்தமான வேலை வாய்ப்பைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

நாட்டை விட்டு வெளியேற பலர் ஆவலுடன் காத்திருக்கும் போது, தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் உணவளிக்க நாட்டிலேயே தங்க விரும்புபவர்களும் உள்ளனர்.

இந்த நிலையில், பணத்தை உழைப்பதற்காக, சில குடும்பங்கள் பயன்படுத்தும் சமீபத்திய உயிர்வாழும் முறை பாலியல் தொழிலாகவும் மாற்றம் பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி)

# மகளிர் தினத்தை முன்னிட்டு டூடுல் வெளியிட்ட கூகுள்




(வோஷிங்டன்)

உலகளாவிய ரீதியில் நேற்று சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்ட நிலையில், கூகுள் நிறுவனம் சிறப்பு டூடுலை வெளியிட்டுள்ளது.

பல நாடுகளில் உள்ள பெண்களின் கலாசாரத்தை பிரதிபலிப்பது போல குறித்த டூடுல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல துறைகளில் பணியாற்றும் பெண்களைக் குறிக்கும் வகையில் அதில் உள்ள படங்களின் காட்சிகள் பிரதிபலிக்கின்றன. (4)

### கடன் மறுசீரமைப்பு

# இலங்கையின் முயற்சிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் பாராட்டு

(கொழும்பு)

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள செயற்பாடுகளை வரவேற்பதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அத்தோடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதேநேரம் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதாக ஐரோப்பிய ஒன்றியம் தனது டுவிட்டர் பக்கத்தில் அறிவித்துள்ளது. (4)

# கொழும்பில் பல்கலை மாணவர்கள் ஒன்றுகூடி நேற்று போராட்டம்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று பல்கலைக்கழக மாணவர்கள் பெருந்திரளானோர் இணைந்து ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

கொழும்பு பல்கலைக்கழக வளாகத்திற்குள் நேற்று முன்தினம் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த போராட்டம் நடத்தப்பட்டது.

இந்நிலையில் பல்கலைக் கழக மாணவர்களுடன், பேராசிரியர்களும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

ஆர்ப்பாட்டம் காரணமாக துன்முல்லை சந்தி மற்றும் Reid அவென்யூ பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று அனைத்து பல்கலைக் கழக மாணவ ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் காரணமாக பதற்ற நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# பாடசாலை மாணவர்களுக்கு சட்டம் கற்பிக்க நடவடிக்கை

### நீதி அமைச்சர்

(கொழும்பு)

நாட்டின் சட்ட முறைமை பற்றிய அறிவை பாடசாலை மாணவர்களுக்கு வழங்கும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சாதாரண மாணவர்களுக்கு சட்ட அறிவை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது 7-8 ஆண்டுகளாக, நாட்டின் அடிப்படை சட்ட அமைப்பு குறித்த படிப்பை பொது நிலை குழந்தைகளுக்கு வழங்க வேண்டும் என்று நாங்கள் பரிந்துரைத்துள்ளோம்.

இது தொடர்பாக அமைச்சர்கள் குழு முடிவு எடுத்து, தயார் செய்ய அறிவுறுத்தியுள்ளது.

சம்பந்தப்பட்ட கல்விப் பாடத்திட்டம், பொதுப் பாடப்பிரிவு குழந்தைகளுக்கு 12 காலகட்டங்களுக்கு சட்டம் கற்கும் வாய்ப்பளிக்கிறது.

2023 இல் அமுல்படுத்துவோம் என நம்பினோம். இந்த ஆண்டு அமுல்படுத்தப்படுமா எனத் தெரியவில்லை. இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டு பரிந்துரைகளை இதில் சேர்ப்போம் என நம்புகிறோம் எனத் தெரிவித்தார். (4)

# பெரும்பான்மையான மக்கள் தேர்தலை கோரவில்லை!

### அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)



நாட்டில் பெரும்பான்மையான மக்கள் இந்த நேரத்தில் தேர்தலைக் கேட்கவில்லை, நாட்டில் பல பிரச்சினைகள் உள்ளன. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது, பலரின் வாழ்வாதாரம் முடக்கப்பட்டுள்ளது, தலையில் தலையணையை மாற்றுவது போல், எங்களால் முடியாது. தேர்தலை நடத்துவதன் மூலம் தீர்வு காண வேண்டும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

வீரகட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விவசாய அமைச்சர் என்ற முறையில் வார இறுதி நாட்களில் நாட்டின் ஏதாவது ஒரு பகுதிக்கு செல்கிறேன். அதுமட்டுமின்றி பொதுமக்களை சந்திக்கிறேன்.

அந்த மக்கள் தங்களது தொழிலை நடத்த தகுந்த சூழலை கேட்கிறார்கள் தேர்தல் அல்ல. இன்று தேர்தல் தேவை இல்லை. ஆனால் சில அரசியல் கட்சிகளால் இவை சோடிக்கப்பட்டுள்ளன.

ஜனநாயக நாட்டில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தலை தள்ளி வைப்பது நல்லதல்ல. ஆனால் இன்று நாம் சாதாரண நாட்டில் வாழவில்லை. நெருக்கடிகளை உருவாக்கியது யார் என்று தேடுவதை விட, தற்போதுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வுகளை வழங்குவதே இப்போது செய்ய வேண்டும். (4)

# மு.வண்டி விபத்து 3 வயது சிறுமி பலி

(கொழும்பு)

உடதும்பறை - மடுகல்ல பாதையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் 3 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முச்சக்கர வண்டி ஒன்று பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் மேற்படி சிறுமி மரணித்துள்ளதாக உடதும்பறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த சிறுமி உடதும்பறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு மரணமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மரணமடைந்த சிறுமி மீமுறே பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். உடதும்பறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (4)

# கேகாலையில் ஐவருக்கு மரணதண்டனை விதிப்பு

(கொழும்பு)

கேகாலை மாவட்ட மேல் நீதிமன்றத்தில் நேற்று குற்றம் சாட்டப்பட்ட ஐந்து பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

03.07.2014 அன்று கேகாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தெவலகம, கஹகல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற விருந்தின் போது சீமெந்து கல்லினால் தாக்கி நபர் ஒருவரைக் கொன்றதாக குற்றம் சுமத்தப்பட்ட ஐவருக்கே இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டது. (4)

# பலரையும் நெகிழ வைத்த உணவுக்கடை

(திருமலை)

திருகோணமலை - நிலாவெளி செல்லும் வீதியில் வீதியோர சாப்பாட்டுக் கடை பற்றிய தகவல்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றது.

குறித்த வீதியோர சாப்பாட்டுக் கடையில் "பணமின்றி பசியென்று வரும் ஏழைக்கு என்னிடம் உணவுண்டு." என்ற வாசகம் எழுதப்பட்டு அம்மா ஒருவர் உணவு வழங்கி வருகின்றார்.

இப்படியும் நல்ல இதயங்களா இவர்கள் எங்கிருந்தாலும் சந்தோசமாக வாழ வேண்டும் என இணையவாசிகள் பாராட்டி வருகின்றனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 122





'புவிச் சக்கரவர்த்தி', 'திரிபுவன சக்கரவர்த்தி, 'ஏழுலகைச் சக்கர வர்த்தி என்னும் பட்டங்களையும் அந்தக் கவிராயர் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டிருக்கிறார்!" என்றார் சுந்தர சோழர்.

இதைக் கேட்ட புலவர்கள் அத்தனை பேரும் ஆச்சரியக் கடலில் மூழ்கித் தத்தளித்தார்கள் என்று கூறினால், அதை வாசகர்கள் பொய் என்று தள்ளி விடக் கூடாது. ஆசிரியரின் கற்பனை, அணி அலங்காரம், இல்பொருள் உவமை, என்று இவ்விதம் ஏதாவது ஒரு வகை இலக்கணம் கூறி ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும்!

**இருபத்தெட்டாம் அத்தியாயம்**
**இரும்புப் பிடி**

திடீரென்று பொங்கிய புது வெள்ளம் போன்ற ஆச்சரியத்தின் வேகம் சிறிது குறைந்ததும் புலவர் தலைவரான நல்லன் சாத்தனார், "பிரபு! அப்படியானால், இந்தப் பாடலை இயற்றிய கவி" என்று தயங்கினார்.

"உங்கள் முன்னால், கால்களின் சுவாதீனத்தை இழந்து, நோய்ப் படுக்கையில் படுத்திருக்கும் புவிச் சக்கரவர்த்திதான்!" என்றார் சுந்தர சோழர்.

புலவர்களிடையே பலவித வியப் பொலிகளும் ஆஹாகாரமும் எழுந்தன. சிலர் தங்களுடைய மனோநிலையை எவ்விதம் வெளியிடுவது என்று தெரியாமல் தலையையும் உடம்பையும் அசைத்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் தங்களுடைய மனோநிலை இன்னதென்று தங்களுக்கே தெரியாமல் கல்லாய்ச் சமைந்திருந்தார்கள்!

சுந்தர சோழர் கூறினார்: "புலவர் பெருமக்களே! ஒரு சமயம் பழையாறையில் புலவர்களும் கவிஞர்களும் என்னைப் பார்க்க வந்தார்கள். அந்தக் கூட்டத்தில் உங்களில் சிலரும் இருந்திருக்கலாம். ஒவ்வொருவரும் சோழ குலத்தின் வள்ளல் தன்மையைக் குறித்து ஒவ்வொரு பாடல் சொன்னார்கள் என்னைப் பற்றியும் பாடினார்கள்.

நான் 'இவருக்கு இதைக் கொடுத்தேன்', 'அவருக்கு இதை அளித்தேன்' என்றெல்லாம் பாடினார்கள். அச்சமயம் இளையபிராட்டி குந்தவையும் என் அருகில் இருந்தாள். புலவர்கள் பரிசில்கள் பெற்றுச் சென்ற பிறகு அவர்கள் பாடிய பாடல்களை அரசிளங்குமரி புகழ்ந்து பாராட்டினாள்.

குந்தவையிடம் நான் 'புலவர்களையெல்லாம் விட என்னால் நன்றாகப் பாட முடியும்' என்று சபதம் கூறினேன். பிறகு தான் வேடிக்கையாக 'இந்தப் பாடலைப் பாடினேன். 'எனக்குப் பரிசு கொடு!' என்று கேட்டேன். குழந்தை என் முதுகின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு, 'இந்தாருங்கள் பரிசு' என்று கன்னத்துக்கு இரண்டு அறை கொடுத்தாள்! அது நேற்று நடந்தது போல் எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஆனால் ஆண்டு எட்டுக்கு மேல் ஆகிறது!" என்றார்.

"விந்தை! விந்தை!" என்றும், "அற்புதம்! அற்புதம்!" என்றும் புலவர்கள் கூறி மகிழ்ந்தார்கள்.

குந்தவை என்ற பெயரைக் கேட்டதுமே வந்தியதேவனுக்கு மெய்சிலிர்த்தது. சோழ குலத்தில் பிறந்த அந்த இணையில்லாப் பெண்ணரசியின் எழிலையும் புலமையையும் அறிவுத்திறனையும் பற்றி அவன் எவ்வளவோ கேள்விப்பட்டதுண்டு.

அத்தகைய அதிசய அரசகுமாரியைப் பெற்றெடுத்த பாக்கியசாலியான தந்தை இவர். தாய் அதோ பக்கத்தில் அமர்ந்திருக்கும் மூதாட்டி. சுந்தர சோழர் தம் செல்வப் புதல்வியைக் குறித்துப் பேசும் போது எவ்வளவு பெருமிதத்துடன் பேசுகிறார்? அவர் குரல் எப்படித் தழுதழுத்து உருக்கம் பெறுகிறது?


வந்தியத்தேவனுடைய வலக்கரம் அவனுடைய இடையைச் சுற்றிக் கட்டியிருந்த பட்டுத் துணிச் சுருளைத் தடவிப் பார்த்தது. ஏனெனில் குந்தவைப்பிராட்டிக்கு அவன் கொண்டு வந்திருந்த ஓலை அச் சுருளுக்குள் இருந்தது. தடவிப் பார்த்த கை திகைப்படைந்து செயலிழந்து நின்றது. அவனுடைய உள்ளம் திக்பிரமை கொண்டது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## எள்ளுப் போச்சு! எண்ணெய் வந்தது!



ஓர் ஊரில் உழவன் ஒருவன் இருந்தான். அவன் பெரிய மீசையுடன் பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தான். உழுவதற்காக அவன் வைத்திருந்த கலப்பை உடைந்து விட்டது.

புதிய கலப்பை செய்வதற்கு மரம் வெட்டுவதற்காகப் பக்கத்திலிருந்த காட்டுக்குள் நுழைந்தான் அவன்.

அங்கிருந்த பெரிய மரம் ஒன்றைத் தேர்ந்து எடுத்தான். "நல்ல வைரம் பாய்ந்த மரம். இதில் கலப்பை செய்தால் நீண்டகாலம் உழைக்கும்" என்று சொல்லிக் கொண்டே கோடரியால் அதை வெட்டத் தொடங்கினான்!

அந்த மரத்தில் நிறைய பேய்கள் குடி இருந்தன. அந்த மரத்தை வெட்டுவதைக் கண்டு அவை பயந்து நடுங்கின.

மரத்தை விட்டுக் கீழே இறங்கிய எல்லாப் பேய்களும் அவன் காலில் விழுந்தன.

பேய்களைக் கண்ட அவனுக்கு அச்சத்தால் மூச்சே நின்று விடும் போல இருந்தது. என்ன நடக்கப் போகிறதோ என்று நடுங்கியபடியே இருந்தான்.

கிழப்பேய் ஒன்று, "ஐயா! இந்த மரத்தில் நாங்கள் பரம்பரையாக வாழ்ந்து வருகிறோம். எதற்காக இதை வெட்டுகிறீர்கள்? எங்களுக்கு வாழ்வு கொடுங்கள்" என்று கெஞ்சியது.

இதைக் கேட்டதும் அவனுக்குப் போன உயிர் திரும்பி வந்தது. தன் நடுக்கத்தை மறைத்துக் கொண்டான்.

பேய்களைப் பார்த்து அதிகாரக் குரலில், "நிலத்தில் எள் விதைக்க வேண்டும் புதிய கலப்பை செய்வதற்காக இந்த மரத்தை வெட்டுகிறேன். நீங்கள் என் காலில் விழுந்ததால் பிழைத்தீர்கள். இல்லையேல் உங்களை எல்லாம் ஒழித்து இருப்பேன். என் வீட்டுத் தோட்டத்தில் பத்துப் பேய்களைக் கட்டி வைத்து இருக்கிறேன்" என்று கதை அளந்தான் அவன்.

"ஐயா! மரத்தை வெட்டாதீர்கள். நாங்கள் வேறு எங்கே போவோம்? எங்கள் மீது இரக்கம் காட்டுங்கள்" என்று எல்லாப் பேய்களும் அவன் காலைப் பிடித்துக் கொண்டு அழுதன.

"கலப்பை இல்லாமல் நான் என்ன செய்வேன்? என்னிடம் இரக்கத்தை எதிர்பார்க்காதீர்கள். மரத்தை வெட்டியே தீருவேன்" என்றான் அவன்.

கிழப்பேய் அவனைப் பார்த்து, "ஐயா! உங்கள் நிலத்தில் ஓராண்டிற்கு எவ்வளவு எள் விளைகிறது?" என்று கேட்டது.

"ஐம்பது மூட்டை எள்?" என்றான் அவன்.

"ஆண்டிற்கு நூறு மூட்டை எள் நாங்கள் தருகிறோம். இந்த மரத்தை வெட்டாதீர்கள்" என்று கெஞ்சியது அது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனம்.
~ கோன்பு தஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கறந்த பால் முலைபுகா கடைந்த வெண்ணெய் மோர் புகா உயர்ந்த விலை குறைந்துபோகா

சிவவாக்கியர் என்றொரு பெரும் சித்தர் இருந்தார்.

எதையும் யதார்த்தமாக, இயற்கை விதி முறைகளோடு இசைந்ததாக அவரின் கருத்துக்கள் அமைந்தன.

அந்தவகையில், இறந்தவர்கள் ஒரு போதும் உயிர்ப்புப் பெறமுடியாது என்பதை இந்த உலகுக்கு வலியுறுத்த முற்பட்ட அவர், கறந்தபால் முலைபுகா கடைந்த வெண்ணெய் மோர் புகா... என்ற பாடலினூடு **இறந்தவர்கள் உயிர்ப்பதில்லை இல்லையே** எனப் பாடி முடிக்கின்றார்.

அவரின் இந்தப் பாடலை எடுத்து இயம்புவதற்காக அதை நாம் முன்வைக்கவில்லை.

மாறாக எங்கள் இலங்கைத் திருநாட்டில் பொருட்களின் விலைகள் உயர்வடைந்தால், அவை ஒருபோதும் குறைவதில்லை என்பதைக் கூறவே சிவவாக்கியரை இங்கு நினைவுபடுத்தினோம்.

ஆம், இப்போது இலங்கை ரூபாயின் பெறுமதி அதிரடியாக ஏற்றமடைந்து வருகிறது.

இதை இன்னொரு வகையில் கூறுவதாயின், டொலரின் கொள்வனவு விலையானது இலங்கை ரூபாயில் குறைவடைந்து வருகிறது எனலாம்.

இவ்வாறு டொலரின் பெறுமதி குறையும் போது நாம் இறக்குதி செய்கின்ற அத்தனை பொருட்களின் விலைகளும் சடுதியாக வீழ்ச்சியடையும்.

தவிர, உள்நாட்டில் உற்பத்தி செய்கின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளும் கணிசமாகச் சரிவடையும்.

இருந்தும் அவ்வாறான விலைக்குறைப்புகள் இன்னமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

பொதுவில் நம் நாட்டில் விலை ஏற்றம் என்றதும் அது உடனடியாக அமுல்படுத்தப்பட்டு விடும்.

ஆனால் விலைக்குறைப்பு என்றால், அது சிவவாக்கியர் கூறியதுபோன்று; கறந்தபால் முலைபுகா, கடைந்த வெண்ணெய் மோர் புகா என்பதுபோல **இங்கு உயர்ந்த விலை குறைவடையா** என்று கூறிக் கொள்ளும் அளவிலேயே நிலைமையுள்ளது.

அதாவது விலை அதிகரிப்பு ஏற்பட்ட அக்கணமே குறித்த பொருளின் விலை அதிகரிப்புக்கு உட்படுகிறது.

அதேபோல விலைக்குறைப்பு ஏற்படும் போது அதனையும் அக்கணமே அமுல்படுத்தி, குறைந்தவிலையில் பொருட்களை விற்பனை செய்ய வேண்டும்.

எனினும் அது நடைமுறைக்கு வருவதாக இல்லை.

உண்மையில் விலைக்குறைப்பு ஏற்படுகின்றபோது அதனை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வருகின்ற தர்மத்தை நம் வர்த்தகப் பெருமக்கள் செய்தாக வேண்டும்.

ஆம், இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி காரணமாக எத்தனையோ ஏழைக் குடும்பங்கள் ஒருநேர உணவுக்குக்கூட திண்டாடுகின்றன.

இந்நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள விலைக் குறைவை நடைமுறைப்படுத்தாவிட்டால், அது ஏழைகளின் வயிற்றில் அடிப்பதாக அமையும்.

எனவே இலங்கை ரூபாயின் பெறுமதியில் ஏற்பட்ட முன்னேற்றம் தரக்கூடிய விலைக் குறைப்பை நுகர்வோர் அனுபவிப்பதற்கு வர்த்தகப் பெருமக்கள் உதவ வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழர் உரிமைகள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன

## கஜேந்திரகுமார் எம்.பி.

(கொழும்பு)

நல்லிணக்கவாதியாகவும் சமாதானத்தின் கர்த்தாவாகவும் தன்னை உலகுக்கு வெளியில் காட்டிக்கொள்ள ஜனாதிபதி முயற்சித்தாலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் உரிமைகள் திட்டமிட்டவகையில் அழிக்கப்படுகின்றன.

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் உண்மை நோக்கம் ஜனாதிபதிக்கு கிடையாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற கலால் சட்டம் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தினால் நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. பொருளாதார முன்னேற்றத்திற்காக ஏனைய நாடுகளை நாட வேண்டிய நிலை தோற்றம் பெற்றுள்ளது.

இந்தப் பின்னணியில் அரசாங்கம் கடனளிப்பவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் தனது அரசியல் இருப்பை வலுப்படுத்திக்கொள்ளும் முயற்சிகளை ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார்.

ஜனாதிபதி தனது நற்பெயரை மேம்படுத்த முயற்சிக்கின்றார். கடந்த முறை அவர் நல்லிணக்கம் தொடர்பில் இனப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாகவும் கூறினார். அனைத்து கட்சி மாநாட்டையும் நடத்தி சமாதானத்தை ஏற்படுத்துபவர் போன்று செயற்பட்டார். ஆனால் உண்மையில் அதற்கு எதிரான வகையிலேயே செயற்பாடுகள் நடக்கின்றன. இப்படியிருக்கையில் வெளியில் நல்லிணக்கவாதியாக அவர் தன்னைக் காட்ட முயற்சிக்கின்றார்.

காலனித்துவ ஆட்சி காலத்தில் புராதன இடமாக அடையாளம் காணப்பட்ட இடம், மீண்டும் கட்டியெழுப்பப்படுகின்றது.

இராணுவத்தினர் தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து மறைமுகமான திட்டங்களை மேற்கொள்வதாக கருதுகின்றோம். குருந்தூர் மலையில் எந்தவித நிர்மாணங்களுக்கும் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

எனினும் அதனையும் மீறி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இங்கு பௌத்த விகாரை அமைக்கப்படுகின்றது. ஆனால் பௌத்தர்கள் அங்கு இல்லை.

மறுபுறம் மட்டக்களப்பில் மயிலத்தமடுவில் கால்நடை மேய்ச்சல் நிலமாக அடையாளம் காணப்பட்ட இடங்களாக 2010 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டது. அமைச்சரவை பத்திரம் ஊடாக அது அடையாளப்படுத்தப்பட்டது. தமிழ் முஸ்லிம் மக்கள் பயன்படுத்துகின்றனர்.

ஆனால் இன ரீதியில் இதனை பிரிக்கின்றனர். மாதுறு ஓயா வலது கரையில் இருக்கும் மக்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். இந்த பிரதேசங்களில் வாழும் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்படுகின்றனர். இதனை நிறுத்த வேண்டும்.

ஜனாதிபதி முழு உலகுக்கும் சமாதான ஏற்பாட்டாளராக காட்டும் வேளையிலேயே இவ்வாறான சம்பவங்கள் நடக்கின்றன. இதேவேளை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

யாரென்றே தெரியாதவர்கள் அங்குள்ள ஏரிகளில் பண்ணைகளை நடத்தும் நிலைமை காணப்படுகின்றது. மீன்பிடிக்கென அமைச்சர் இருக்கின்றார். வெளிநாட்டு கடற்றொழிலாளர்கள் அங்கு வந்து மீன்பிடிக்க முடியும் என்று கூறுகின்றார். இவ்வாறான நடவடிக்கைகளை நாங்கள் கண்டிக்கின்றோம்.

இதேவேளை இனவாத நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. வெளிநாட்டு நிறுவனங்கள் உதவிகளை வழங்கும் போது, அவர்கள் வழங்கும் பணம் இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பயன்படுத்தப்படும் என்று அறிவிக்க வேண்டும் என்றார். (4-7)

# நிறைவேற்று சபையில் ஒப்புதலுக்கு 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும்

## சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை செய்து கொண்ட ஊழியர் ஒப்பந்தம் எதிர்வரும் 20ஆம் திகதி நிறைவேற்று சபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும் என அதன் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினாஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

சீனா, இந்தியா மற்றும் பாரிஸ்கிளப் உள்ளிட்ட இலங்கையின் முக்கிய கடன் வழங்குநர்களிடமிருந்து நிதி உத்தரவாதங்களைப் பெறுவதிலும், தீர்க்கமான கொள்கை நடவடிக்கைகளை எடுப்பதிலும் இலங்கை அதிகாரிகள் அடைந்துள்ள முன்னேற்றத்திற்கு பாராட்டும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கைக்கு நிதியுதவி வழங்குவதற்கு சர்வதேச நாணயநிதியத்தின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர், உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட ஏனைய தரப்பினரிடம் இருந்து கடனுதவி பெறும்வாய்ப்பு இலங்கைக்கு கிடைக்கும் என சர்வதேச நாணயநிதியம் கூறுகிறது.

இதற்கிடையில், நாட்டின் கடனை மறுசீரமைப்பதற்காக இரு தரப்பு கடன் வழங்குபவர்களிடம் இருந்து 10 முதல் 15 ஆண்டுகள் வரை சலுகையை சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், சீனா விடம் இருந்து இலங்கைக்கு 2 வருடகால நீடிப்பே வழங்கப்பட்டது.

இதேவேளை இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கான சீனாவின் எழுத்துமூல உத்தரவாதம் சர்வதேச நாணய நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** 5 ஆவது ஒழுங்கை எல்லப்பர்மருதங்குளம், ஆசிக்குளம், எல்லப்பர் மருதங்குளம், எல்லப்பர் மருதங்குளம் கோவிலடி, கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம் மாதா கோவிலடி, கோவில்குளம் 10 ஆவது ஒழுங்கை மகாறம்பைக்குளம், மதுரநகர் கல்நாட்டின குளம், பெரிய கூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக்கல்லூரியின் 2023ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டியானது இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் ம.ஞானசம்பந்தன் தலைமையில் இடம்பெறும். (4-7)

## விற்பனை நிலைய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச செலக விதாதாவள நிலைய உள்ளூர் உற்பத்திப் பொருற்களுக்கான விற்பனை நிலைய திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு மங்கும் பான் விற்பனை நிலையத்தில் விதாதாவள நிலைய தொழில் முயற்சியாளர்கள் அமைப்புத் தலைவர் ம.கிரிசன் தலைமையில் இடம்பெறும். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயக்கச்சியிலுள்ள 45 ஏக்கர் காணியை

# காணிகளற்ற யாழ்., கிளிநொச்சி மக்களுக்கு பகிர்ந்தளியுங்கள்

## பச்சிலைப்பள்ளி தவிசாளர் ஜனாதிபதிக்கு கடிதம்

(அக்கராயன்)

**கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் முஸ்லிம் குடும்பங்களை குடியேற்றுதல் தொடர்பாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.**

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்திருக்கும் இயக்கச்சி கிராம அலுவலர் பிரிவில் காணப்படும் காணிசீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 45 ஏக்கர் காணிகளை வடக்கு மாகாணத்திற்கு வெளியே உள்ள முஸ்லிம் குடும்பங்களுக்கு தனா 2 பரப்பு வீதம் பிரித்து வழங்கி அக்காணிகளுக்குள் தனியார் நிறுவனம் ஒன்றின் ஊடாக வீடுகளை அமைத்து வழங்குவதற்கான பூர்வாங்க ஏற்பாட்டினை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா முன்னெடுத்து இருப்பதாகவும் இதற்கு காணி சீர்திருத்த ஆணைக்குழுவும் புரண ஒத்துழைப்பு வழங்கி உள்ளதாகவும் பத்திரிகைச் செய்திகள் மூலம் அறிந்து கொண்டேன்.

குறித்த பிரதேசத்தில் காணப்படுகின்ற காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகளில் யாழ். மாவட்டத்தில் குடியிருக்கும் காணிகளற்ற 14862 குடும்பங்களுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் குடியிருக்கும் காணிகளற்ற 4512 குடும்பங்களுக்கும் பிரித்து வழங்குமாறு நானும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளினாலும் தொடர்ச்சியாக வடமாகாண ஆளுநர் மற்றும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் போன்றோருக்கும் கோரிக்கைகள் விடப்பட்டிருந்தன.

இருந்த போதிலும் குறித்த விடயத்திற்கு எதுவித முன்னேற்றமான நடவடிக்கைகளையும் குறித்த தரப்பினர் மேற்கொள்ளவில்லை. பிரதேச மக்கள் பிரதிநிதிகளுடனோ அல்லது மாவட்ட மற்றும் பிரதேச குழுக்களுடனோ கலந்துரையாடப்படாமல் தங்கள் பிரதிநிதியான ஆளுநரால் தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற குறித்த விடயம் மக்கள் மத்தியில் பாரிய கொந்தளிப்புகளை ஏற்படுத்தி உள்ளது.

எனவே குறித்த காணி பகிர்ந்தளிப்பு நடவடிக்கைகளை உடன் நிறுத்துவதற்கான அறிவுறுத்தல்களை அதிகாரிகளுக்கு வழங்குங்கள் என அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-350)

# மதுபான நிலையங்களை திறக்க பிரதேச சபையில் அனுமதி மறுப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரியில் இயங்குகின்ற மதுபானசாலைக்கும் முழங்காவிலில் திறக்க உள்ள மதுபானசாலைக்கும் அனுமதிகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து பூநகரி பிரதேச சபையின் தவிசாளரினால் கடிதங்கள் மதுபானசாலையுடன் தொடர்புடையவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட மட்டுவில் நாடு மேற்கு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவில் ஏ-32 சாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள மதுபானசாலை வியாபாரம் மேற்கொள்கின்றமைக்கு எமது பிரதேச சபையின் அனுமதி பெறப்படவில்லை.

குறித்த வியாபார நடவடிக்கையினை சபையின் அனுமதியுடன் மேற்கொள்வதுடன் தற்போது வியாபார நடவடிக்கை மேற்கொள்ளும் இடம் பொது மக்களுக்கு இடையூறாக காணப்படுவதனால் குறித்த வியாபார நிலையத்தினை பொருத்தமான இடத்திற்கு மாற்றம் செய்வதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை முழங்காவில் நகரத்தில் மது விற்பனை நிலையம் திறப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ள உரிமையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறித்த மது விற்பனை நிலையம் திறக்கும் இடம் பொருத்தமற்ற இடம் எனவும் அருகில் ஆலயம், விளையாட்டு மைதானம், மக்கள் செறிந்து வாழும் இடங்கள் காணப்படுகின்றன.

இதனால் குறித்த இடத்தினை மாற்றுமாறும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (4-6-350)



திருவள்ளுவர் குரு பூசைதினமான நேற்று வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்டத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி குருபூசைதினம் அனுஷ்டிக்கப்பட்டது. (படம் -சதீஸ்)

# ஆனையிறவில் நடராஜர் சிலை திறப்பும் வணிக சுற்றுலா வலயம் ஆரம்பமும்

(அக்கராயன்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை தீர்மானத்திற்கு அமைவாக நடராஜர் பணி குழுவினால் நிர்மாணிக்கப்பட்ட நடராஜர் சிலையினை கையளிக்கும் நிகழ்வு மற்றும் ஆனையிறவு வணிக சுற்றுலா வலயம் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு என்பன எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

விசேடமாக 27 அடி உயரமான நடராஜர் சிலை ஆறடி உயரமான பீடத்தில் ஏற்றி கிளிநொச்சி ஆனையிறவு வீர மண்ணுக்கு அழகு சேர்க்கிறது. இப்பகுதியில் வர்த்தக தொகுதிகளை பெற விரும்புபவர்கள், எரிபொருள் நிலையம் அமைக்க விரும்புபவர்கள், உல்லாச பயண துறையை அபிவிருத்தி செய்ய விரும்புபவர்கள் கரைச்சி பிரதேச சபையுடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-6-350)

# சிறுவயது திருமணத்திற்கு எதிராக கிளிநொச்சியில் விழிப்புணர்வு போராட்டம்




(கிளிநொச்சி)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இளம் வயது திருமணத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, கிளிநொச்சியில் நேற்று விழிப்புணர்வு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

லிட்டில் ஏய்ட் நிறுவனத்தினரின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலத்திற்கு முன்பாக இந்த விழிப்புணர்வு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புத்தகப்பை சுமக்கும் கையில் கர்ப்பத்தை சுமப்பதா, தாயோடு கைகோர்த்து செல்பவள் சேயோடு கைகோர்த்து செல்கிறாள் என பலதரப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டம் இடம்பெற்றது. (4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 200 | 250 | 300 |
| உருளைக்கிழங்கு | 130 | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 320 | 300 | 350 | 400 |
| தக்காளி | 80 | 100 | 100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 180 | 200 |
| கோவா | 100 | 100 | 100 | 120 |
| கரட் | 100 | 200 | 200 | 240 |
| பூசணி | 80 | 80 | 60 | 80 |
| புடோல் | 180 | 180 | 140 | 200 |
| வாழைக்காய் | 150 | 150 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 | 320 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 130 | 150 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 600 |
| வெண்டக்காய் | 200 | 280 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 200 | 250 | 250 | 300 |
| லீக்ஸ் | 250 | 260 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 240 | 180 | 250 |
| கறிமிளகாய் | 350 | 400 | 300 | 360 |
| முருங்கைக்காய் | 1600 | 1800 | 1400 | 1800 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 200 | 270 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 180 | 150 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-110 |
| இராசவள்ளி | 300 | 300 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 140 | 140 | 120 | 250 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 25 | 40 | 60 |
| ஈரப்பலா | 80 | 140 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி...

கிளிநொச்சியில் பல இடங்களில் இந்த நாட்களில் மாடுகளுக்கு மிக வேகமாக பரவி வரும் பெரியம்மை எனப்படும் இலம்பி போன்ற நோய் காரணமாக இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்தை கிளிநொச்சி சுகாதார திணைக்கள அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் இணைந்து எடுத்துள்ளனர். (4-7)

## மோ.சைக்கிள்...

அருகில் உள்ள காளி கோயிலுக்கு செல்வதற்காக வீதியைக் கடந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அவரை மோதி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதில் படுகாயங்களிற்குள்ளாகி சுயநினைவிழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் அன்று இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் நேற்று புதன்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (4-7,60)

## பூநகரியில்...

துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் 40 வயதுடைய மற்றும் 33 வயதுடைய ஆண்கள் இருவரும் 19 மற்றும் 26 வயதுடைய பெண்கள் இருவருமே காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படுகாயங்களுக்குள்ளான 40 வயதுடையவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குடும்ப உறவினர்களாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி சென்ற நிலையிலேயே குறித்த விபத்து இடம்பெற்றது.

குறித்த விபத்து தொடர்பாக பூநகரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-7,316)

## செவ்வாய்...

இதேவேளை, QR கோட்டா மூலம் வாரத்திற்கு பெறப்படும் எரிபொருளின் அளவு களில் எந்த மாற்றமும் இல்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (4-7)

## பாணின் விலை...

விலை 10 ரூபாயால் குறைக்கப்பட்டு 170 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் என்று யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் செயலர் கா.பாஸ்கரன் அறிவித்துள்ளார். (4-7)

## விபத்துக்குள்...

இவ்வாறு உயிரிழந்தவர் ஐயனார் கோவிலடி கொடிகாமத்தைச் சேர்ந்த சுகந்தி உதயகுமார் (வயது-47) என்பவராவார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.போதனா வைத்தியசாலையின் சுகாதார உதவியாளராக கடமை புரியும் மேற்படி பெண் கடந்த முதலாம் திகதி தனது கணவருடன் மோட்டார் சைக்கிளில் ஏ9 வீதி வழியாக பயணித்துக் கொண்டிருந்தவேளை, முகமாலை பகுதியில் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையினால் வாகனத்தில் இருந்து தூக்கி வீசப்பட்டார்.

உடனடியாக அவர். பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று புதன்கிழமை காலை உயிரிழந்துள்ளார். (4-7,60)

## கடும் பாதுகாப்பு...

யாக தடை செய்துள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது.

ஆகவே பொருளாதார மீட்புக் கொள்கைகளில் ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்ய வேண்டும் என்றும் சமூகப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார பின்னடைவுக்கான பிற விடயங்களில் ஆர்வம் காட்ட வேண்டும் என்றும் வலி யுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்த ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்,

ஊழல், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற அடிப்படை பிரச்சினைகளையும் நிவர்த்தி செய்ய வேண்டும்.

கடுமையான பாதுகாப்புச் சட்டங்களை நம்புவதும், சிவில் சமூகம் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மீதான துன்புறுத்தல் மற்றும் கண்காணிப்பு ஆகியவை முடிவுக்கு வர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும் நிலைமாறுகால நீதிக்கான உண்மையான மற்றும்விரிவான அணுகுமுறையை ஆதரிக்க தனது அலுவலகம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் கூறினார். (4-7)

## பந்து எமது...

நேற்று மாலை இடம்பெற்ற ஆளுங்கட்சி கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு மக்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நேரத்தில் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு பொருத்தமான சூழல் ஒன்று இல்லை. அத்துடன் உள்ளூராட்சி தேர்தல் ஒன்றை நடத்துவதனால் பெரிய மாற்றம் ஒன்று வந்துவிடப் போவதில்லை.

நாங்கள் ரூபாயை மேலும் வலுவடைய செய்ய வேண்டியதே தற்போது முக்கிய விடயமாகும்.

இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு 4 வருடங்களாகும்என பலர் கூறினார்கள். ஆனால் 8 மாதங்களில் நெருக்கடியைத் தீர்க்க முடிந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் இந்த மாதம் வழங்கப்படும். அதற்கமைய, எதிர்வரும் நாட்களில் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படும். நிவாரணம் வழங்கப்படும்.

மேலும் ஏனைய கட்சியினர் தேர்தலை பயன்படுத்தி ஆட்சியை கைப்பற்றுவதற்கு தீவிரமாக முயற்சித்து வருகின்றனர்.

பந்து எங்கள் கைகளுக்கு கிடைத்துள்ளது. அடித்து ஆட தயாராக இருங்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்சி உறுப்பினர்களுக்கு மேலும்தெரிவித்துள்ளார்.(4-7)

## நஞ்ச...

இடம்பெற்றிருந்தது.

பரிசோதனையின் முடிவில் உடலில் நஞ்சருந்தியதற்கான ஆதாரங்கள் எதுவும் இருக்கவில்லை. மரணித்தவர்களினது இரத்தம், [illegible] மேலதிக

பரிசோதனைக்காக அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன்மாதிரிகளுக்கான பரிசோதனை முடிவு வந்ததன் பின்னரே மரணத்திற்கான காரணம் என்னவென தெளிவான ஒரு முடிவுக்கு வர முடியும் என சட்ட வைத்திய பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா குட்செட் வீதி, உள்ளக வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரின் சடலங்கள் பொலிஸாரால் நேற்றைய தினம் மீட்கப்பட்டிருந்தது.

குறித்த சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த சிவபாதசுந்தரம் கௌசிகன் (வயது-42), வீட்டின் விறாந்தை பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டதுடன், அவரது மனைவியான கௌ.வரதராயினி (வயது-36), இருபிள்ளைகளான கௌ. மைத்ரா (வயது-9), கௌ.கேசரா (வயது-3) ஆகியோர் உறங்கியபடியும் சடலமாக மீட்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவரும் வவுனியா பொலிஸார் மீட்கப்பட்ட சடலங்களை சட்டவைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (4-7,299)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 08/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1508
வெற்றி இலக்கங்கள்
துலாம் 4 3 0 9 9 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.03.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1083
F 06 49 78 81
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

கொவிசெத
திகதி 2023.03.08 சீட்டிழுப்பு இலக்கம் 3295
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
E 08 62 68 76
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 08/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1401
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
S 04 29 49 65 80

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.08
சீட்டிழுப்பு இலக்கம் 362
வெற்றி இலக்கங்கள்
கும்பம் 02 11 19 47 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/03/08
சீட்டிழுப்பு இலக்கம் 5053
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
E 6 9 3 8 9 1
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2028 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.03.08 தினம் புதன்கிழமை
Y 05 29 61 64
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,870,800/-
DLB www.dlb.lk

சனிதா Shanida
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.08
சீட்டிழுப்பு இல : 4189
வர்ணம் : ஊதா
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,999,160/-
வெற்றி இலக்கங்கள் 17 32 70 71 ஆங்கில எழுத்து X
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2023-03-08
வெற்றி வாரம் 3740
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 04 10 23 35 ரிஷபம்
ரூ.500/- பரிசுகளுக்கான 8936
ரூ.100/- பரிசுகளுக்கான 126
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,882,260/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 24 22 38 54 58
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1204
வர்ணம் இள நீலம்
திகதி 2023.03.08 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 311,722,392.20
DLB DEVELOPMENT LOTTERIES தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1903
சீட்டிழுப்பு திகதி 2023-03-08
வெற்றி இலக்கங்கள் 11 23 53 60 ஆங்கில எழுத்து R
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 40,741,136.80
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1854
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.03.08
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,706,100/-
வெற்றி இலக்கங்கள் 11 16 24 44 ஆங்கில எழுத்து W
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 07.02.2023 செவ்வாய்க்கிழமை
அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சபாரட்ணம் அருளானந்தபிள்ளை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 07.03.2023 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று 09.03.2023 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (14810)

"இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்"

எமது குடும்பத் தலைவரை நாம் இழந்து தவித்த வேளை எமக்கு ஆறுதலளித்து சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புதுவீதி, கொக்கவில் மேற்கு, கொக்குவில்.
இங்ஙனம் - குடும்பத்தினர்

## வேலை ஆள் தேவை

யாழ் நகரிலுள்ள பலசரக்கு கடைக்கு முன் அனுபவமுள்ள 40 வயதுக்கு மேற்பட்ட வேலையாள் தேவை.

மாத சம்பளம் : 45,000/=
வேலை நேரம் : காலை 8.45 முதல் இரவு 7.45 வரை

தொடர்புக்கு :-
**071 130 1282** (14832)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6125) **V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து
உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில்
வீட்டில் தங்கியிருந்து
வேலை செய்ய
பணிப்பெண் தேவை.

தொடர்புக்கு :-
**077 815 3300** (14831)

## பணியாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் தனியார் நிறுவனமொன்றில் அலுவலக பணி புரிவதற்கு **ஓய்வுபெற்ற** அல்லது 40 வயதிற்கு மேற்பட்ட **ஆண் / பெண்** ஊழியர்கள் தேவை, யாழ் நகரை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு :-
**077 833 3837** (14833)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 82 பரப்பு**
**காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (14837)

**074 318 7263 | 076 755 8606 | 076 436 5814**

# அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்

## அமரர் சுகிர்தராணி இராமச்சந்திரன் [சூட்டி]



மலர்வு
01.02.1970
வயது 53
மறைவு
08.02.2023

பருத்தித்துறை, புலோலி மேற்கு, சாளம்பையை
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர் சுகிர்தராணி இராமச்சந்திரன்
அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய
அழைப்பிதழும், நன்றி நவிலலும்.

அன்னாரின் மரண செய்திகேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில்வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIP Book ஆகியவை மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்கட்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பதாதைகள் மூலம் துயர நிகழ்வினை வெளிப்படுத்தியவர்கட்கும், சம்பவம் நடைபெற்ற தினம் எம்மூர் பொது நிறுவனங்களான சதாவதானி ச.ச. நிலையம், சதாவதானி சி.க.கூ.சங்கம், சதாவதானி பொது நல நிதியம் என்பன எமக்காக தமது நிறுவனங்களின் முன் கண்ணீர் அஞ்சலி பதாதைகளை வைத்தும் எமக்கு ஆறுதல் தெரிவித்தமைக்கும், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் மேலும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 10.03.2023 அன்று வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் தெணியம்மன் ஆலய அந்தியேட்டி மடத்திலும் அதனைத் தொடர்ந்து வீட்டுக் கிருத்திய கிரியைகள் முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப்பிரார்த்தனையினும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வினும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*வருகை தந்த அனைத்து அன்பு உள்ளங்களையும் நேரடியாக சந்திக்க முடியாதுள்ளதால் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

சாளம்பை, புலோலி மேற்கு, [illegible]
பருத்தித்துறை. T.P: 077 [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.